இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: ``என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர். (மத் 10: 37-38)

# அஞ்சவேண்டாம், இறைத்தந்தை நம்மைப் பராமரிக்கிறார்

கிறிஸ்துவின் சீடர்கள் சில நேரங்களில், கடவுளே தங்களைக் கைவிட்டது போன்று உணரலாம், அச்சூழலிலும் கூட, வாழ்வு கடவுளின் கரங்களில் உள்ளது என்பதை அறிந்து, அஞ்சாமல் இருக்கவேண்டும் - திருத்தந்தை பிரான்சிஸ்

பகைமை, அடக்குமுறை மற்றும், கடவுளால் கைவிடப்பட்டதாக உணரும் போதும் கூட, கிறிஸ்துவின் சீடர்கள் அஞ்சத் தேவையில்லை என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஞ்ஞாயிறன்று கூறினார்.

ஜூன் 21, கடந்த ஞாயிறு நண்பகலில், வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு, நற்செய்தி வாசகத்தை (மத்.10,26-33), மையப்படுத்தி, மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்துவைப் பின் செல்வோர், தங்கள் வாழ்வில், அனுபவத்தில் உணரக்கூடிய மூன்று சூழல்களில், அஞ்சாமல் இருக்கவேண்டும் என இயேசு தொடர்ந்து அழைப்பு விடுக்கிறார் என்று கூறினார்.

## பகைமை

இறைவார்த்தையை உள்ளபடியே அறிவிப்பதற்குப் பதில், அதை இனிப்பில் தோய்த்து அறிவிப்பதால், உண்மையில் அதை அறிவிப்பவருக்கு எதிராக செயல்படுவோரைக் குறித்துப் பேசியத் திருத்தந்தை, இறைவார்த்தையை, திறந்தமனதுடனும், பொதுவிலும் அறிவிக்குமாறு இயேசு தம் சீடர்களை ஊக்கப்படுத்துகிறார் என்று கூறினார்.

## அடக்குமுறை

தம் சீடர்கள், வன்முறை அடக்குமுறைகளை நேரிடையாக எதிர்கொள்வர் என்ற



திருத்தந்தை பிரான்சிஸ் அவரது மறையுரையின் போது...

எச்சரிக்கையை விடுக்கும் இயேசுவின் கூற்று, எல்லாக் காலங்களிலும் உண்மையாகின்றது என்றுரைத்த திருத்தந்தை, இன்றும், உலகெங்கும், பல கிறிஸ்தவர்கள் சித்ரவதைகளுக்கு உள்ளாகின்றனர் என்று கூறினார்.

இவர்கள், நற்செய்திக்காகவும், அன்புக்காகவும் துன்புறுகிறார்கள் என்றால், இவர்கள் நம் காலத்தின் மறைசாட்சிகள் என்றும், ஆணவம் மற்றும் வன்முறையால் நற்செய்தி அறிவிக்கும் சக்தியை அடக்கும் வழிகளைத் தேடுவோர் குறித்து அஞ்சத் தேவையில்லை என்று கூறியத் திருத்தந்தை, சீடர்கள் எதற்கு மட்டும் அஞ்சவேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்.

## கடவுளின் கரங்களில்

இறைவனின் கொடையை இழப்பதற்கும், நற்செய்தியின்படி வாழ்வதை நிறுத்துவதற்கும், பாவத்தின் விளைவாக, நன்னெறி வாழ்வின் மரணத்திற்கும் இயேசுவின் சீடர்கள் அஞ்சவேண்டும் என்று கூறிய திருத்தந்தை, கிறிஸ்துவின் சீடர்கள் சில நேரங்களில் கடவுளே தங்களைக் கைவிட்டது போன்று உணரலாம், அச்சூழலிலும் கூட, வாழ்வு கடவுளின் கரங்களில் உள்ளது என்பதை அறிந்து, அஞ்சாமல் இருக்கவேண்டும் என்று கூறினார்.

கடவுள் தங்களை அன்புகூர்கிறார், அவர் நம்மைப் பராமரிக்கிறார், ஏனெனில் அவர் கண்களில் நம் மதிப்பு மேலானது என்றுரைத்த திருத்தந்தை, நம் விசுவாசச் சான்றுவாழ்வு, ஒளிவுமறைவின்றி இருப்பதே முக்கியம், இதுவே விண்ணில் அவரோடு இருப்பதற்கும், மீட்பிற்கும் வரையறை என்று கூறினார்.

தீமையைவிட கடவுளின் அருளே எப்போதும் அதிக வல்லமைமிக்கது என்று மூவேளை செப உரையில் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்னை மரியாவிடம் செபித்து, தன் உரையை நிறைவு செய்தார்.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# மலாக்கா பங்குகளுக்கான வழிபாட்டு வழிகாட்டி

**மலாக்கா:** மலாக்கா மாகாணத்தின் சமய இலாக்காவின் பரிந்துரையின் பேரில், மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டத்தின் ஆயர் பெர்னர்ட் போல் அவர்கள், மலாக்கா மாநிலத்தில் உள்ள ஆலயங்களில் திருப்பலிகள் கொண்டாட அனுமதி வழங்கியுள்ளார்.

இன்று தொடங்கி ஜூலை 4 வரை ஆலயங்கள், சிற்றாலயங்கள் மற்றும் திருப்பலி கொண்டாடப்படும் மையங்களில் நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு நடைமுறைக்கேற்ப (SOP) ஆயத்தப் பணிகள் நடைபெற வேண்டும்.

ஜூலை 4-க்குள், தயாரிப்புப் பணிகளைப் பற்றிய அறிக்கையை ஆயரின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

தொடக்கத்தில் ஒரு திருப்பலி மட்டும் கொண்டாடப்படும், பின்னர் குறைகளைக் களைந்து அதிகப்படியான திருப்பலிகள் தொடங்கப்படலாம். நிலைமை ஆராயப்பட்டு, பின்னர் வார நாள் திருப்பலிகள் தொடங்க அனுமதி வழங்கப்படும்.

வழிபாட்டுக்கென, 17, ஜூன் 2020 அன்று வெளியிடப்பட்ட ஆயரின்




மேய்ப்புப்பணி வழிகாட்டி விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஜோகூர் மாநிலத்தின் சமய இலாக்காவின் பரிந்துரை அறிக்கை இன்னும் வெளியிடப்படாதக் காரணத்தில், இந்த அனுமதி மலாக்கா மாநிலத்திற்கு மட்டுமே உரியதாகும்.

மாலக்கா மாநிலத்தின் பங்குகளில் வழிபாடுகள் தொடங்கப்படவும் இறைமக்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் ஆயர் பெர்னர்ட் போல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறார்.

# இயேசு, புலம்பெயர்ந்தோரில் உடனிருக்கிறார்

## திருத்தந்தை அறிவுறுத்து

**வத்திக்கான்** : புலம்பெயர்ந்தோர் மற்றும் குடிபெயர்ந்தோரின் முகங்களில் இயேசுவைக் கண்டு அவர்களை அன்புகூரவும், அவர்களுக்குப் பணியாற்றவும் அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த ஜூன் 20, இச்சனிக்கிழமையன்று புலம் பெயர்ந்தோர் உலக நாள் கடைப் பிடிக்கப் பட்டதையொட்டி, மேற்கண்டவாறு அவர் கேட்டுக்கொண்டார்.

ஏரோதின் காலத்தில் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தப்பித்துச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்ட இயேசு, புலம்பெயர்ந்தோர் மற்றும் குடிபெயர்ந்தோரில் உடனிருக்கிறார். அவர்களின் முகங்களில் தம்மைக் காண கிறிஸ்து நமக்கு அழைப்பு விடுக்கிறார். .

## திருத்தந்தைக்காக இறைவேண்டல்

மேலும், ஒவ்வோர் ஆண்டும், இயேசுவின் திருஇதய விழாவன்று, அருள்பணியாளர்களின் புனித வாழ்வுக்காகச் செபிக்கும் செபமாலை பக்திமுயற்சி, இவ்வாண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப் பட்டது.

ஜூன் 19, கடந்த வெள்ளியன்று சிறப்பிக்கப்பட்ட இயேசுவின் திருஇதய விழாவன்று, உலகின் பல பகுதிகளின் விசுவாசிகள், திருத்தந்தைக்காகச் செபமாலை செபித்தனர்.

இவ்வெள்ளியன்று 11வது ஆண்டாக, இந்த பக்தி முயற்சி இடம்பெற்றது. இதில் பங்குகொள்வோரின் எண்ணிக்கை, ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகிறது என்றும், 2019ம் ஆண்டில், 285க்கும் அதிகமான இடங்களில் விசுவாசிகள் கூடி செபமாலை செபித்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் ஒவ்வொருவரும், அந்த விழா நாளில் ஓர் அரை மணி நேரம் செபமாலையின் ஒரு பத்து மணிகளைச் சொல்லி, அருள்பணியாளர்களின் புனித வாழ்வுக்காக அர்ப்பணிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் நான்கு கட்ட வழிபாட்டு வழிகாட்டி

**கட்டம் I - கட்டுப்பாடுகள்**

1. பங்கு மக்களில் 70 வயதுக்கு மேற் பட்டவர்களும் 12 வயதுக்குக் குறைந்த சிறுவர்களும் ஆலய வளாகத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2. இருமல், காய்ச்சல், சளி, சுவாசக் கோளாறு போன்ற அறிகுறிகளைக் கொண்ட வர்களும் உடல் நோயுள்ள பங்கு மக்களும் இல்லத்திலேயே இருக்க வேண்டும்.

3. அடுத்த அறிவிப்பு வரை திருவழிபாடு அல்லாத எல்லா பொது நடவடிக் கைகளும் (கூட்டங்கள், மறைக்கல்வி வகுப்புகள், ஆசிஜஅ வகுப்புகள்) போன் றவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

4. திருப்பலியைத் தவிர்த்து, மற்றனைத்துப் பொதுச் சந்திப்புகள் (பொதுக்கூட்டங் கள், ஊர்வலங்கள்) தடை செய்யப் படுகின்றன.

5. ஒவ்வொரு பங்கிலும், ஆலயத்தின் மொத்த இருக்கை எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே திருப் பலியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படுவர்

**கட்டம் 2 -ஆலயத்தில் நுழையும் முன்**

1.பணியில் உள்ளவர்களின் வழிகாட்டு தலுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

2. உடல் சார்ந்த தொடுதல் இல்லாமல் தலை வணங்கி வாழ்த்துகளைத் தெரிவித் துக் கொள்ளலாம்.

3. உடல் வெப்ப நிலை எடுக்கப்பட வேண்டும். வருகையாளர் புத்தகத்தில் பெயர் பதிவுச் செய்ய வேண்டும்,

5. MySejahtera வசதியைப் பதிவிறக்கம் செய்து,அதன்வழி விபரங்களைப் பதிவு செய்வது வரவேற்கப்படுகிறது.

6.ஆலயத் திற்குள் நுழையும் முன்னர் கைகள் சுத்தம் செய்யும் திரவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

7.ஆலய வளாகத்திற்குள் எல்லா நேரத்திலும் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். திருப்பலியில் கலந்து கொள் ளும் பங்கு மக்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும்.

9. எல்லா நேரத்திலும் சமூக இடைவெளி யைக்கடைபிடிக்க வேண்டும்.

**கட்டம் 3- திருப்பலியின் போது**

1. பாடுவது ஊக்குவிக்கப்படவில்லை

**2 திருப்பலியின் போது காணிக்கை எடுக் கப்படாது**

3. அமைதியைப் பகிரும் போது - தலை குனிந்து அமைதியைப் பகிர வேண்டும். உடல் சார்ந்த தொடுதல் கூடாது.

4. இருக்கையில் அமர்ந்திருக்கும் போதும் நற்கருணையைப் பெறச் செல்லும் போதும் சமூக இடைவெளியைப் பேண வேண்டும்.

5. நற்கருணையை உட்கொள்ளும் போது தவிர்த்துத் திருப்பலி முழுவதும் முகக் கவசத்தை அணிந்திருக்க வேண்டும்

**கட்டம் 4 - ஆலயத்திலிருந்து வெளியேறும் போது**

**1. ஆலயத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட் டிருக்கும் பெட்டிகளில் உங்கள் காணிக் கையைப் போடவும்.**

2. சுரூபங்களையும் படங்களையும் தொட்டு வணங்குதல் கூடாது.

3. எப்பொழுதும் பாதுகாப்பு இடைவெளி யைப் பராமரித்து சீரான முறையில் வெளியேற வேண்டும்.

4. திருப்பலி முடிந்ததும் ஆலயத்தை விட்டு விரைவில் வெளியேற வேண்டும்.

5. ஆலய வளாகத்தில், திருப்பலிக்கு முன்னரோ பின்னரோ கூடி உறவாடுவதற் கும் உண்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

6. அவசர வேளையில் மட்டுமே கழிவறை யைப் பயன்படுத்த வேண்டும்.

இறைமக்கள் பொது நலனை மனதில் கொண்டு ஆயர்களின் வேண்டுகோள் களுக்கும் வழிகாட்டிகளுக்கும் ஆதரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**பங்குத்தந்தையர்களின் மற்றும சேவை பணிக்குழுவின் ஆலோசனைகளுக்கு இணங்கப் பங்குகளில் திருப்பலிக்குத் திரும்புவோம். பொறுமையைக் கடைபிடிப்போம்.**

# திருவிவிலிய ஞாயிறு செய்தி 2020 இதயப்பூர்வமான திருவிவிலிய வாசிப்பு

**முன்னுரை:**

சமூகத்தொடர்பு சாதனங்களால் சிறு கிராமமாக சுருங்கிவிட்ட உலகில் நாம் வாழுகின்றோம். தொலைவில் இருப்பவரை சந்தித்து உறவாட நீண்டதூரம் பயணம் செய்து நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை. இ-மெயில், வாட்ஸ்"ப், ட்விட்டர் இன்னும் இதுபோன்ற இணையதளங்கள் வழியாக மிக எளிதாக தொலைவில் இருப்பவரோடு உறவாட முடிகின்றது. ஆனால், அதிக நேரங்களில் இத்தகைய சமூகத் தொடர்பு சாதனங் களில் நாம் சிறைபட்டு கிடக்கின்றோம் என்பதே உண்மை. அதனால், நமது குடும்பத்தினர், நம்மைச் சுற்றி வாழ்பவர்கள், மற்றும் நண்பர்களுடன் பேசி உறவாட நேரமிருப்பதில்லை.

எடுத்துக்காட்டாக, குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பசியாறி னாலும், நம் அருகில் அமர்ந்திருக்கும் பெற்றோர் மற்றும் உடன்பிறப்புகளோடு பேசாமல், நமது கரங்களும் கண்களும் செல்போனில் மட்டுமே பதிந்திருக்கின்றன! இது உண்மையான மனித உறவை சீரழிக்கிறது. இச்சூழலில், உண்மையான உறவை எவ்வாறு உருவாக்குவது? நம்முடன் வாழும் நம் சகமனிர்கள் நமக்கு யார்? கடவுளோடு நாம் எவ்வாறு உறவாடுகின் றோம்? மேலோட்டமாகவா? அல்லது தனிப்பட்ட நெருங்கிய நிலையிலா? என்று சிந்திப்போம்.

**உறவாடும் இறைவார்த்தை**

இறைவார்த்தை என்பது வெற்றுச் சிந் தனையோ அல்லது கோட்பாடோ அல்ல. மாறாக, அது மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்ட இயேசுவையே குறிக்கின்றது. அவரை நமது கண்களால் கண்டு, அவரது குரலை காதுகளால் கேட்டு, அவரை கரங்களால் தொட்டு, உற்று நோக்கமுடியும் (1 யோவா 1:1). இத்தகைய அனுபவம் கொண்டவர்களே திருத்தூதர்கள். அவர்கள் மனுவுருவான இயேசுவை நேரில் கண்டு, அவரோடு நெருங்கிய உறவுகொண்டு, உயிருள்ள சான்றாக அவரை நமக்கு அறிவித்தார்களேத் தவிர, ஏதோ சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை தாராமாகக் கொண்டு அல்ல. தந்தையுடனும் அவரது மகன் இயேசு கிறஸ்துவுடனும் திருத்தூதர்கள் கொண்டிருந்த அதே நட்புறவை நாமும் கொண்டிருக்க வேண்டும் எனும் நம்பிக்கையோடு, அவர்கள் கண்டதையும், கேட்டதையும், நமக்கு அறிவித்தார்கள் (1 யோவா 1:2-3).

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், "கிறிஸ்துவ நம்பிக்கை என்பது ஏதோ ஒருசில உண்மைகளை மட்டும் நம்புவது அல்ல. மாறாக இயேசு கிறிஸ்துவோடு நாம் கொண்டிருக்கும் தனிப்பட்ட உறவேகும்"




என்கிறார். மேலும், "திருவிவிலிய வாசிப்பு, தனி இறைவேண்டல் மற்றும் திருவழிபாட்டு கொண்டாட்டங்கள் வழியாக நாம் கிறிஸ்துவை சந்திக்கமுடியும். நாம் அவரது இதயத்தை தொடுவதும், அவர் நமது இதயங்களைத் தொடுவதையும் உணர முடியும். கிறிஸ்துவோடு நாம் கொண்டிருக் கும் இத்தகைய தனிப்பட்ட உறவினாலும், உயிர்த்த இயேசுவை சந்திப்பதனாலும் மட்டுமே நாம் உண்மையான கிறிஸ்தவர் களாக முடியும்" என்கிறார்.

**இறைவார்த்தை உயிருள்ள உறவை நம்முடன் ஏற்படுத்துகிறது**

இறைவார்த்தையைக் குறிப்பிடும் போதெல் லாம், வெறும் கோட்பாட்டை அல்லாமல், மனுவுருவான கிறிஸ்துவைக் குறித்தே பேசுகின்றோம் என்பதை நாம் நினைக்க வேண்டும். எனவே திருவிவிலியத்தை கரங்களில் எடுக்கும் ஒவ்வொரு முறையும் நம்மோடு பேசி உறவாட விரும்பும் இயேசுவோடு நாம் உறவாடுகின்றோம். நிலைவாழ்வு அளிப் பவரும், திருத்தூதர் களால் அறிவிக்கப்பட்டவருமான இயேசுவே நம்முடன் பேசுகின்றார். நாம் அவருடைய குரலைக் கேட்டு அவருக்கு பதில்மொழி கூறுகின்றோம் (1 யோவா 1:1). குறிப்பாக, திருவழிபாட்டில், இறைவார்த்தை வாசிக்கப்படும்போது, இறைவார்த்தையில் உடனிருக்கும் இயேசுவே நம்முடன் பேசுகின்றார் இது ஒரு மறைபொருள். நம்பிக்கையாளர்கள் இறைவார்த்தையைக் கேட்டு, கொண்டாடி, என்றும் வாழும் கடவுளோடு உறவாடி வாழ அழைக்கப் படுகின்றோம். இத்தகைய வாழ்வே சிறந்த இறைவேண்டாகும்.

தொடரும்.....

# கலப்பையில் கை வைத்தப்பின் திரும்பிப் பார்க்காதே!

இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னைப் பின்பற்றி வருவோர் எப்படி இருக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகின்றார். முதலாவதாக இயேசுவின் சீடர்கள் யாவரும் சிலுவையைச் சுமப்பதற்கு தயாராக இருக்கவேண்டும். சிலுவை என்று சொல்கிறபோது அது நாம் நமது பணிவாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சனைகள், அவமானங்கள், அச்சுறுத் தல்கள் போன்றவையாகும். இப்படி யார் ஒருவர் துன்பங்களைத் தாங்கிக்கொள்ள முன்வருகிறாரோ அவர்தான் தன்னுடைய சீடராக இருக்கமுடியும் என்பது இயேசுவின் தெளிவான போதனையாக இருக்கின்றது.

ஒருமுறை இயேசு தன்னைப் பின்பற்றி வர நினைத்தவரைப் பார்த்து, "நரிகளுக்குப் பதுங்குக்குழிகளும், வானத்துப் பறவைகளுக் குக் கூடுகளும் உண்டு, மானிட மகனுக்குத் தலைசாய்க்கக் கூட இடமில்லை" எனிறார். லூக் 9: 58). இயேசு இப்படிச் சொன்னபிறகு அந்த மனிதர் இயேசுவைப் பின்தொடர்ந்தாரா? இல்லையா? என்று நமக்குத் தெரியாது. ஆனால் இயேசு தன்னைப் பின்பற்றி வருவோர் தன்னைப் போன்று துன்பங்களையும், சிலுவைகளையும் அனுபவிக்கவேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

அடுத்ததாக இயேசு தன்னைப் பின்பற்றி வரக்கூடியவர்களுக்கு இருக்கவேண்டிய தகுதியாகச் சொல்வது: தன்னை (இறைவனை) மட்டுமே முழுமையாக அன்பு செய்யக்கூடியவராக இருக்கவேண்டும் என்பதாகும். "என்னைவிடத் தம் தந்தை யிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுளோர் என்னுடையோர் எனக் கருதப்பட தகுதியற்றோர் என அவர் தெளிவுப்படுத்துகிறார்.

ஆனால் இன்றைக்கு இயேசுவின் சீடர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாம் இயேசுவை முழுமையாக அன்புசெய்யாமல், இந்த உலக செல்வங்களை, உறவுகளை அன்புசெய்து வாழ முற்படுகிறோம். "பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றை பற்றுக பற்று விடற்கு" (குறள் 350) என்றார் திருவள்ளுவர். ஆம், ஒன்றுக்கும் உதவாத உலகச் செல்வங்களைத் துறந்துவிட்டு ஒப்பற்ற செல்வமாக இறைவனைப் பற்றிக்கொண்டு வாழவேண்டும். அதுதான் உண்மையான இறைப்பற்று வாழ்வாக இருக்கும் என்பது தான் திருவள்ளுவரின் கருத்து. ஆண்டவர் இயேசுவும் நமக்கு அதைத்தான் நமக்கு நினைவூட்டுகிறார்.

"ஐயா, உம்மைப் பின்பற்றுவேன்; ஆயினும் முதலில் நான் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்" என்று சொல்கிற மனிதரிடம் இயேசு, "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறை யாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்று.ம், இயேசுவின் சீடர் இவ்வுலகிற்கு அல்ல, இறைவனுக்கே முன்னுரிமை அளிப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார்..

இயேசுவின் சீடராவதற்கான மூன்றாவது தகுதி: இயேசுவுக்காக உயிரைத் தர முன்வருதாகவும். இன்றைய நற்செய்தியில் இயேசு, "என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக்கொள்வர்" என்று கூறுவார். ஆம், இயேசு சொல்வது போல உயிரைத் தருவதைவிடவும் இயேசு வின்பால் இருக்கும் நமது அன்பை வெளிப்படுத்த வேறு உயர்ந்த வழிலலை. எத்தனையோ புனிதர்கள், மறைசாட்சிகள் இயேசுவுக்காக தங்களுடைய உயிரையும் இழக்கத் துணிந்தார். அதன்வழியாக தாங்கள் இயேசுவின் உண்மைச் சீடர்கள் என்பதை இந்த உலகிற்கு வெளிப்படுத் தினார்கள். ஆகவே நாம் ஒவ்வொருவரும் இயேசுவுக்காக நம்முடைய உயிரையும் கூட இழந்து, அதன்மூலம் நாம் இயேசு வின் உண்மைச் சீடர்கள் என்று இந்த உலகிற்கு வெளிப்படுத்துவோம். மனமிருந் தால் மார்க்கமுண்டு.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**பொதுக்காலம் 13-ஆம் ஞாயிறு**

2 அர 4: 8-11, 14-16a
திபா 89: 1-2. 15-16. 17-18
உரோ 6: 3-4, 8-11
மத் 10: 37-42

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் I**